# <u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>

## O.S. No. 81/2008

Deposition of **<u>PW.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 24.03.2026 in accordance with the provision of Act 1 of 1873.

Name : கணேசன் Father's Name : லேட். துரைசாமி

துவக்க நேரம்: 03.42 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1. நான் இவ்வழக்கை கடந்த 2008ம் ஆண்டு மார்ச் மாதம் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். தற்பொழுது எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.த.சா.ஆ. 16 முதல் 21 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள கிணற்றில் இரண்டு மின் இணைப்புகள் உள்ளது என்றால் சரிதான். மின் இணைப்பு 2-ஆனது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல, அது எங்களுக்கு இருவருக்கும் பொதுவானது ஆனால் மின் இணைப்பு 237 எனக்கு மட்டுமே பாத்தியமானது. நான் சொல்வது தவறு என்றாலும் மின் இணைப்பு எண்.2-ஆனது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

2. பிரதிவாதிகள் தாவா சொத்தில் உள்ள கிணற்றிலிருந்து அவர்கள் கிரையம் பெற்ற நிலத்திற்கு தண்ணீர் எடுத்து செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் அவ்வாறு பிரதிவாதிகளுக்கு சொந்தமாக வேறு சொத்துக்கள் அங்கு இல்லை என்றாலும் சரியல்ல. 1,3 பிரதிவாதிகள் அவர்கள் கிரையம் பெற்ற நிலத்திற்கு பொது கிணறு மற்றும் பொது

மின் இணைப்பின்மூலம் நீர் பாசனம் செய்ததால்தான் பிரச்சினை ஏற்பட்டது. நான் சொல்வது தவறு என்றாலும் அவ்வாறு பொது கிணற்றிலிருந்து பிரதிவாதிகள் அவ்வாறு தண்ணீர் எடுத்ததில்லை என்றாலும் தற்பொழுது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தற்பொழுது எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்பதால் அந்த ஆவணங்கள் நிராகரிக்கப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கும், நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 03.52 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.81/2008, Dt.24.03.2026.